**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

அ.வ.எண்.163/2019 தேதி-07.12.2024
(P.W.1) - ராபின்சன்

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் வேறு ஒரு நபரின் சொத்தை என் நீண்ட காலமாக கைவசம் வைத்துள்ளேன் என்பதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, என் அப்பா விலைக்கு வாங்கிய நிலத்திற்கு தான் உரிமைகோரினேன். அதனடிப்படையில்தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா விலைக்கு வாங்கிய சொத்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் வாங்கினார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். புதிய சர்வே எண் 55/2 சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். அதற்கான கிரைய ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ-2 ஆக தாக்கல் செய்துள்ள ஆவணமான பழைய பட்டா எண் -7457 ஆவணம் என்றால் சரிதான். சாமுவேல் மகன் ரசலைய்யன் மற்றும் ஒருவர் என்றுள்ளதை திருத்தம் செய்து வேதக்கண் மகன் தேவசகாயம் என்றால் சரிதான், ஆனால் அது அப்போது தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் யார் திருத்தம் செய்தது என்பது தெரியாது.

2. சாமுவேல் மகன் ரசலைய்யன் மற்றும் பாலைய்யன் என்பது தெரியுமா என்றால் தெரியாது. அந்த பாலைய்யன்தான் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு சொத்தை எழுதிகொடுத்தவர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-2 ஆவணம் தவறுதலான அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்பதால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. மேலும் அதனடிப்படையில் தீர்வை செலுத்தியதாக தீர்வை ரசீதை தாக்கல் செய்துள்ளதும் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. பட்டா ஆவணம் கரம் செலுத்தியதற்கான ஒரு ஆவணம்தான் என்றாலும் அதனடிப்படையில் உரிமைகோர முடியாது என்றால் சரியல்ல. 55/2 என்ற சர்வே எண் தற்போது 7303 லீலாபாய் என்பவரின் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. அதன் மொத்த பரப்பளவு 3 ஏர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 55/2-ல் என் அப்பாவோ நானோ பயிர் செய்யவில்லை என்றாலும் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3. புதிய சர்வே எண் 55/2-ல் உள்ள சொத்து மொத்தமாக 3 ஏரும் பிரதிவாதிகள் கைவசத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் விலைக்கு வாங்கிய இடம் 10, 15 அடி தாழ்வான பகுதி என்றாலும் அதை 2022-ல் கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். கிரையம் பெற்றவர் பெயர் என்ன என்றால் ஷீபா ஆகும். பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தானது 1972-ல் 1799 ஆவணப்படி பாலைய்யன் என்பவருக்கு கிடைத்ததை பாலைய்யன் மேற்சொன்ன சொத்தை 1986ல் பிரதிவாதி லீலாபாய்க்கு எழுதிகொடுத்தார் என்றால் பாலைய்யன் எழுதிகொடுத்தது தெரியும், ஆனால் இந்த வழக்கு சொத்து எழுதிகொடுக்கப்படவில்லை. புதிய சர்வே எண் 55/2-ல் பிரதிவாதியான லீலாபாய்க்குதான் சொத்து உள்ளது என்றாலும் வேறு யாருக்கும் சொத்து இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் கிழக்கு பக்கம் உள்ள சொத்தை நான் விற்றுவிட்டேன் என்றால் சரிதான்.

4. வழக்கு பட்டிகை சொத்து நீண்ட 3 ஏர் அளவு கொண்ட தென்னை மரங்களை கொண்ட சொத்து என்றால் சரிதான். புதிய சர்வே எண் 55/2-ல் பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து என்றாலும் அதில் முள்வேலி அமைக்க அவர்களுக்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்துகளை ஏ மற்றும் பி-பட்டிகை என்று பிரித்து வழக்கு தாக்கல் செய்ததற்கான காரணம் என்ன என்றால் நஞ்சை 42 செண்ட் மற்றும் புஞ்சை 6 செண்டாகும். பொய்யாக தயார் செய்த பட்டாவை வைத்துதான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 16.11.2019 அன்று பிரதிவாதி 15 நபர்களை சேர்த்துக்கொண்டு முள்வேலி அமைக்க வந்ததாகவோ அதை நான் தடுத்ததாகவோ நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து உட்பட மற்ற சொத்துகள் நல்ல தென்னைகளை ஈட்கக்கூடிய மரங்கள் என்றால் 7 மரங்கள் என் அப்பா வைத்த மரமாகும். பிரதிவாதிகளுக்கு 8 மரங்கள் சொந்தமானது.